**செ. கு. எண்**:  112                                                    **நாள்**:21.03.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை -  21.3.2012

20.3.2012 அன்று  காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், பூந்தமல்லி கிராமம், சோமங்கலம் கிராமத்திற்கு செல்லும் சாலை அருகே இரு சக்கர வாகனம்  மீது மாநகர அரசு பேருந்து மோதியதில்,  இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த பூந்தண்டலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. அன்பழகன் என்பவரின் மகள், தனியார் மருத்துவமனை செவிலியர்,  செல்வி பரமேஸ்வரி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருப்பெரும்புதூர் வட்டம், மூன்றாம் கட்டளை கிராம தார் சாலை அருகே இரு சக்கர வாகனம் மீது மாநகர அரசுப் பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த மாங்காடு மேல்ரஜிநாதபுரத்தைச் சேர்ந்த திரு. சம்பத் என்பவரின் மகன் வினோத்குமார் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இவ்விரு சாலை விபத்துக்களில் அகால மரணமடைந்த பரமேஸ்வரி மற்றும் வினோத்குமார் ஆகியோரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தத் துயரச் சம்பவங்களில் காலமான செல்வி பரமேஸ்வரி மற்றும் திரு. வினோத்குமார் ஆகியோரின்  குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**